# INAUGURAL SESSION

Verified RealEstate™

# Seminar
# Towards Sustainable Urban Mobility
## Inaugural Session
## Welcome Address

by
Thiru Dayanand Kataria, IAS
Member Secretary, CMDA

Hon'ble Minister for Information and Chairman, CMDA,
Respected Additional Chief Secretary and Vice-Chairperson, CMDA,
Senior Officers of the Government,
Officials from various departments,
Representatives from the Universities, Institutions,
NGOs, and Media,
Ladies and Gentlemen,

I welcome you all for this seminar – Towards Sustainable Urban Mobility.

2. This seminar is the fourth in a series of seminars organised by the CMDA in the last three years. Following a two-day seminar on the Second Master Plan for CMA, 2026 – Avenues and Opportunities held in October-November 2008, a two-day seminar on Waterways in CMA was held in March 2010 and a one-day seminar on Conservation of Heritage buildings / precincts in the Chennai Metropolitan Area was held in October 2010. The Hon'ble Minister for Information and the Chairman, CMDA has, not only inguaurated all these seminars but also led from the front and provided the required support and encouragement for the successful completion of these seminars. I heartly welcome the Hon'ble Minister for Information and Chairman, CMDA to the seminar.

3. It is gratifying to note that the foresight and the vision of the Addl.Chief Secretary & VC,CMDA has been the guiding force not only in the organisation of the previous three seminars but also in the organisation of the present seminar. Acknowledging the immense support and direction extended by her in the present endeavour, I welcome the Addl.Chief Secretary &VC, CMDA to the seminar.

4. With the objective of benefitting from the experiences of other sister-cities in the country, the CMDA has organised this one-day seminar. The fact that many delegates representing the length and breadth of the country are participating in the seminar has elevated

Verified @ RealEstate™

the seminar to a national level deliberation. It is heartening to note that the experiences of cities like Delhi, Mumbai, Bengaluru, Ahmedabad and Jaipur would be discussed at the seminar for evolving a strategy to promote the cause of sustainable urban mobility. I welcome all the key speakers, the Chairmen of the Technical sessions and the delegates to the seminar. I also welcome all the officers and staff members of the CMDA to the seminar. I hope that the deliberations and the interactions in the seminar would be mutually beneficial and would contribute to evolve sustainable urban mobility strategy for CMA.

5. A special word of gratitude to the media who have gathered here in large numbers to cover the proceedings of the seminar and for your continued efforts and support in carrying out and disseminating the messages related to transport development to the common man.

I welcome one and all to the seminar.

Thank you.

*******

Verified RealEstate™

# Seminar
# Towards Sustainable Urban Mobility
## Inaugural Session
## Presidential Address

by

Tmt. Susan Mathew IAS,
Additional Chief Secretary & Vice Chairperson,
Chennai Metropolitan Development Authority.

Hon'ble Minister for Information and Chairman, CMDA,
Member-Secretary, CMDA,
Chief Planner, CMDA
Distinguished delegates,
Senior Officers of the Government,
Colleagues,
Ladies and Gentlemen.

The last two decades have seen Chennai growing phenomenally in population, urban sprawl, vehicle ownership, traffic volume and economy, surpassing all expectations and forecasts. Simultaneous to this growth, traffic congestion, population and environmental challenges have increased. The Second Master Plan for the Chennai Metropolitan Area with its horizon year as 2026 has spelt out its vision: "to make Chennai a prime metropolis which will be more livable, economically vibrant, and environmentally sustainable with better assets for future generations"

2. Our country has witnessed a tremendous surge of development and consequent vehicular growth in the last two decades. Its reflection has been prominent in the challenges that have emerged in Traffic and Transportation. The most notable urban transport problems are traffic congestion, inadequate parking facilities and insufficient public transport. Besides these, difficulties faced by pedestrians and cyclists, encroachments in public areas, high levels of pollution and energy consumption and accidents add to the woes of urban population.

3. The total vehicle population of Chennai City is 32.78 lakhs. Two-wheelers are increasing at the rate of 25% and four-wheelers at 18% annually. An average of 400 vehicles is registered daily in the City of which 75% are two-wheelers and 20% are four-wheelers. The auto-rickshaws numbering about 52,300 have been increasing at the rate of 15% per annum. In recent years call taxies, share taxies and tractor trailers also have appeared in large numbers on

Verified RealEstate™

city roads. The vehicle ownership which was at 4 per 100 persons in 1981 has leaped up to 66 in 2011.

4. The Second Master Plan has projected the population of the City to be 58.55 lakhs and in the Chennai Metropolitan Area to be 126 lakhs in 2026. It is imperative to zero in on the strategies to address transportation problems, right now.The CMDA has carried out a landmark study titled the Chennai Comprehensive Transportation Study (CCTS). While setting out a huge outlay of Rs. 82,100 Crores spread over 10 years, the study indicates that it is possible to achieve the modal share of 66% of all motorized trips by Mass Transit Modes like rail and bus against the Second Master Plan's goal of 70%. The caveat is that suitable policies should be in place to bridle the levels of automobile use and ownership.

5. The studies conducted by the CMDA also throw up the following facts:

The level of traffic congestion on Chennai roads has increased more than seven-fold during the last two decades. The traffic volume capacity ratio of most of our major roads during peak hours is more than one. This has led to an average speed of 15 kmph on major roads. The severe difficulties in parking that are faced especially in commercial areas of Anna Salai, T.Nagar, Purasawalkam and Mylapore do not have to be stressed to any Chennaite. There has been substantial loss in the road capacity due to haphazard and unauthorised parking and also encroachments by commercial undertakings and even by service agencies. As it is not prudent to reserve large extents of urban space for parking, our attention has to be turned to multi-level parking facilities, some of which are being planned in the congested areas of the city, as on Greams Road and at Broadway.

6. As in most of the other cities in India, pedestrians and cyclists are the most neglected group in Chennai. According to the CCTS Study, walking and cycling account for 34% of the total trips; yet the infrastructure laid for these modes such as foot-paths and cycle lanes are virtually non-existent. As a result, there is a steady decline in the use of cycles. The global trends indicate that many developed cities are rediscovering the advantage of using non-

Verified RealEstate™

motorised modes. Denmark, Netherlands and Belgium are examples of countries that are back to the use of cycles as the popular mode of transport in their cities.

7. The Second Master Plan has taken in its ambit a sustainable urban transport philosophy drawing also from the National Urban Transport policy. I wish to list the strategies identified for sustainable urban mobility in the Second Master Plan. They are:

- Moving people rather than vehicles
- Integrated land use and urban transportation
- Prioritising non-motorised transport
- Optimising the existing road and transport infrastructure
- Putting a parking policy in place
- Redefining the role of para-transport
- Segregating the freight traffic from passenger traffic
- Deploying various traffic management measures
- Putting in place an environmental development management mechanism
- Promoting other transit options such as Light Rail Transit System, Bus Rapid Transit System and Monorail.
- Setting up a unified institutional framework encompassing all modes

8. As a follow up of the identification of strategies, the Government of Tamil Nadu have decided to establish the Unified Metropolitan Transport Authority (UMTA) for the co-ordination and streamlining of the activities of the multifarious agencies involved in the planning, operation and management of transportation systems in the Chennai Metropolitan Area. The Chennai Unified Metropolitan Transport Authority Act 2010 has been notified. The rules and regulations of the Act are being formulated. The Unified Authority is looked forward to with great expectations and is expected to improve the share of mass transit modes and optimize the utilization of urban transport infrastructure.

I hope this Seminar would catalyse discussions on these issues of paramount importance and that an array of recommendations on the steps to be adopted to move forward would be brought out.

*******

Verified RealEstate™

# நீடித்த நிலையான நகர்ப்புறப் போக்குவரத்து - கருத்தரங்கம் தொடக்கவிழா

## தொடக்கவுரை

திரு பரிதி இளம்வழுதி,
மாண்புமிகு செ;ய்தித்துறை அமைச்சர் மற்றும்
தலைவர், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் நடைபெறும் நகர்புறப் போக்குவரத்து குறித்த கருத்தரங்கின் துணைத் தலைவர் திருமதி, சூசன் மாத்யூ அவர்களே, சிறப்புரை வழங்கவுள்ள வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை செயலாளர் திரு. அசோக் டோங்ரே அவர்களே, அனைவரையும் வரவேற்று உரை ஆற்றிய உறுப்பினர்-செயலாளர் திரு. தயானந்த் கட்டாரியா அவர்களே, கருத்தரங்கில் பங்கேற்று துறைசார்ந்த ஆலோசனைகளையும், கருத்துகளையும் எடுத்துரைக்கவுள்ள பெருமக்களே, பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி நண்பர்களே உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. மக்கள் நலத்திட்டங்கள், பொதுமக்களுக்கான வாழ்வாதார வசிதிகள், மாநிலத்தின் வளர்ச்சியை அடித்தளமாகக் கொண்டு செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டங்கள், அடிப்படைக் கட்டமைப்பை மேம்படுத்திடும் வளர்ச்சிப் பணிகள் உள்ளிட்ட செயல்பாடுகளை இடைவிடாமல் செய்து இதுவரை இந்தியாவில் எந்த மாநிலமும் செய்திராத சாதனைகளைப் படைத்த அரசின் 5-வது ஆண்டில் நாம் இங்கே இந்தக் கருத்தரங்கில் கூடியிருக்கிறோம்.

3. கடந்த அரை நூற்றாண்டின் தமிழக வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்த அரசு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களின் அரசுதான் என்பதை தமிழக வரலாறு பேசிக்கொண்டிருக்கிறது. எத்தகைய அரசியல் சூழ்நிலையில் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தாலும் தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பணிகளை தவறாமல் செய்த ஆட்சியாக நம்முடைய ஆட்சி திகழ்கிறது. குறிப்பாக சென்னை மாநககரை எடுத்துக் கொண்டால் இன்றைய சென்னையின் வளர்ச்சிக்கு அன்னையாகத் திகழ்பவர் மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

4. சென்னை மாநகரம் விரிவடையும் போது எழும் பிரச்சனைகளுக்கு மட்டுமல்லாமல், எதிர்காலத்தில் எழப்போகும் பிரச்சனைகளையும் தொலைநோக்குப் பார்வையுடன் கண்டறிந்து அதற்கான தீர்வுகளைத் தமிழக முதலமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள்.

Verified @ RealEstate ™

5. அண்ணாசாலையில் அமைந்துள்ள அண்ணா மேம்பாலத்தை வடிவமைத்ததில் தொடங்கி அண்மையில் திறந்துவைக்கப்பட்ட பெரம்பூர் லோக்கோ ஒர்க்ஸ் கூடுதல் மேம்பாலம் வரையில் நடைபெற்றுள்ள போக்குவரத்து வளர்ச்சிப் பணிகளே இன்றைய கருத்தரங்கத்தின் தலைப்புக்குப் பொருத்தமான எடுத்துக்காட்டுகளாகும். சென்னைக்கு ஒவ்வொரு ஆண்டும் இடம்பெயரும் மக்களின் வருகையால் ஏற்படும் போக்குவரத்து நெரிசல், அதிகரித்துவரும் வாகனங்களின் எண்ணிக்கை ஆகியவற்றைச் சமாளிக்கும் வகையில் கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் 7 மேம்பாலங்களும், ஒரு சுரங்கப்பாதையும் கட்டி முடித்து திறந்து வைக்கப்பட்டுள்ளன. தற்போது 5 மேம்பாலங்கள், 2 சுரங்கப்பாதைகள் அமைக்கும் பணிகள் வேகமாக நடந்துவருகின்றன.

6. கடந்த முறை கலைஞர் ஆட்சியில் இருந்தபோது 9 மேம்பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு இன்றைக்கு பயண்பாட்டில் உள்ளன. இந்தப் பணிகள் மட்டுமல்லாமல் புதிதாக உள்வட்டசாலைகள், வெளிவட்ட சாலைகள் அமைத்ததுடன், சாலைகளை மேம்படுத்தல் போன்ற அடிப்படைப் பணிகள் இந்த அரசு செய்ததால்தான் சென்னையில் போக்குவரத்து நெரிசல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பணிகளை மேற்கொள்ளாமல் இருந்திருந்தால் கற்பனை செய்துகூட பார்க்கமுடியாத அளவுக்கு நெருக்கடியான நிலைமைகள் ஏற்பட்டிருக்கும். ஆனால் அந்த நிலைமை ஏற்படாமல் மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களின் அரசு செயல்பட்டுள்ளது என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

7. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் ஆக்கப்பூர்வமான பல்வேறு பணிகளும் சென்னையின் வளர்ச்சியில் பெரும் பங்குவகித்திருக்கிறது. நாம் உருவாக்கி அரசின் ஏற்பை பெற்றுள்ள இரண்டாவது முழுமைத் திட்டம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. கோயம்பேடு பேருந்து நிலையத்தில் இருசக்கர வகனங்கள் நிறுத்துமிடத்தை அமைத்தது பொதுமக்களுக்கு மிகுந்த பயனுள்ளதாக இருக்கிறது.

8. சென்னை மாநகராட்சியின் வளர்ச்சிப் பணிகள்; சென்னை குடிநீர் வாரியத்தின் சிறப்பான செயல்பாடுகள்; கழிவுநீர் அகற்றும் வடிகால் வசதிகளைத் திறம்படச் செய்தது; சென்னை விமான நிலைய விரிவாக்கப் பணிகள்; ஆயிரம் புதிய பேருந்துகளை இயக்கியது; அரசுடன் தனியாரும் இணைந்து புதிய நகர்புறப் பகுதிகளை உருவாக்கும் முயற்சிக்கான முடிவை

Verified RealEstate

மேற்கொண்டது; துரித ரயில் சேவையைத் திறம்பட இயக்கி வருவது; சென்னை மெட்ரோ ரயில் பணிகளைத் தொடங்கி அதனை விரைவுபடுத்தியது என இப்படி அடுக்கடுக்காக சொல்லிக்கொண்டே போகும் அளவுக்கு வளர்ச்சியை மட்டுமே கருத்தில் கொண்டு இந்த அரசு செயல்பட்ட காரணத்தால்தான் இந்தியாவின் பெருநகரங்களின் வளர்ச்சியில் சென்னை முன்னிலையில் இருக்கிறது. அதற்கு சான்றாகத்தான் நேற்று முன்தினம் புதுடெல்லியில் நடந்த ஒரு விழாவில் பன்னாட்டு தொலைக்காட்சி நிறுவனமான CNN IBN-ல் நிறுவனம் இந்தியாவின் சிறந்த மாநிலத்திற்கான விருதை தமிழ்நாட்டுக்கு வழங்கியிருக்கிறது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

9. அடிப்படைக் கட்டுமான வசதிகளை உருவாக்குவதுதான் மிகமுக்கியமான வளர்ச்சிப் பணிகளுக்கு அடித்தளமாக விளங்குகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நிலையான போக்குவரத்துக்கான சாலைகளையும், பாலங்களையும் அமைக்கும்போது வளர்ச்சி விரிவடைந்துகொண்டே போகும். அதனையொட்டியே தொழில் வளர்ச்சி ஏற்படுகிறது. நம்முடைய மாநிலத்தை நோக்கி பன்னாட்டுத் தொழில் நிறுவனங்கள் வந்த வண்ணம் உள்ளன. அந்த நிறுவனங்களில் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுவதுடன், உற்பத்தி வளர்ச்சியும் ஏற்படுகிறது. எனவே, அடிப்படை கட்டுமான வசதிகளைச் செய்யும்போது, மாநிலத்தில் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி ஏற்படுகிறது. அப்படி ஏற்படும் போது தனிநபர் வருவாயும் பெருகுகிறது. ஆக, மாநிலத்தின் வளர்ச்சி என்பதற்கு அடித்தளமே போக்குவரத்து வசதிகள் உள்ளிட்ட அடிப்படைக் கட்டுமான வசதிகள்தான் என்பதை நினைவில் நிறுத்தி நம்முடைய பணிகளையும் ஆய்வுகளையும் அமைத்துக்கொள்ள வேண்டும்.

10. தமிழ்நாடு முழுவதும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை செய்து கொடுத்ததாலும், சமூகப்பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்தியதாலும் பொருளாதார வளர்ச்சியை தமிழகம் கண்டிருக்கிறது என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். 2005-2006-ஆம் ஆண்டில் தமிழகத்தின் தனிநபர் வருமானம் 39 ஆயிரத்து 692 ரூபாய். ஆனால் 2009-2010-ஆம் ஆண்டில் இது 69 ஆயிரத்து 377 ரூபாயாக உயர்த்திருக்கிறது. இதுமட்டுமல்ல 2009-2010-ல் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி 8.96 சதவீதமாக உயர்ந்து, வரும் ஆண்டில் 10 சதவீதத்திற்கும் அதிகமாக உயரும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

Verified@RealEstate

**11.** இப்போதுதான் கிராமப்புரத்தில் வாழும் மக்கள் தாங்கள் சமூகப் பாதுகாப்பு பெற்றிருப்பதாக உணர்ந்திருக்கிறார்கள்; பெண்கள் தங்களை தற்சார்பு உள்ளவர்களாக உணர்ந்திருக்கிறார்கள். அறிவுசார் பொருளாதாரம் என்ற நிலையைக் கடந்து பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்தியுள்ள "திராவிடப் பொருளாதாரம்" என்று குறிப்பிடும் அளவுக்கு தமிழ்நாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் பொருளாதாரச் சமநிலையை உருவாக்கியிருக்கிறார்கள்.

**12.** வளர்ச்சியை நோக்கிய நகர்மயமாதலின் ஒரு அங்கமாகத்தான் போக்குவரத்திற்கான அடிப்படைக் கட்டமைப்புப் பணிகளைச் செய்யவேண்டும். அத்தகைய பணிகளின் தேவையைப் பற்றியும், வளர்ச்சி நோக்கிலான திட்டமிடுதல் குறித்தும் துறை ரீதியான அனுபவம் வாய்ந்த நிபுணர்கள் அறிவார்ந்த ஆலோசனைகளை, ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை இந்தக் கருத்தரங்கில் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தக் கருத்தரங்கத்தைத் தொடங்கிவைத்து விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்

******************

Verified RealEstate